# சுகாதாரப்பகுதி புது மெருகூட்டப்படும்

Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 9

தபால்பெட்டி எண். 49 — இதழ் 362

போன் 389 — National Tamil Daily — தேசிய தினசரி

[illegible] பிலவங்க தை 27 ஜுல்ஹஜ் 10 சனிக்கிழமை (10-2-68)

## சுகாதார அமைச்சர் சேனநாயக்கா நடவடிக்கை

கொழும்பு, வெள்ளி

சுகாதார அமைச்சின் நிர்வாகத்தில் புதியமெருகூட்டப்படவிருக்கிறது. திறமையான விதத்தில் இயங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி புதிதாகப் பதவியேற்றுள்ள சுகாதார மந்திரி திரு. ஈ. எல். சேனநாயக்கா உத்தரவிட்டுள்ளார்.

நாட்டின் பலபகுதி ஆஸ்பத்திரிகளிலுள்ள மருந்துத் தட்டுப்பாடு ஆஸ்பத்திரி ஊழியர்களின் நடத்தை இவைகள் சம்பந்தமாகசுகாதார அமைச்சு தற்போது தனது கவனத்தை திருப்பியுள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளில் பணியாற்றும் சுகாதாரப்பகுதி அதிகாரிகளுடன் சுகாதார அமைச்சர் திரு ஈ. எல். சேனநாயக்கா பேச்சுவார்த்தை நடாத்தினார். குறைகளைநிறைவாக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

மலேரியாஜுரம் பரவியுள்ள பகுதிகளுக்கு மந்திரி திரு. ஈ. எல். சேனநாயக்கா

[8-ம் பக்கம்பார்க்க]

# டாஙுங் விமான தளத்துக்கும் ஆபத்து; கிராமமும் வீழ்ந்தது

## வியட்காங்கியருக்கு மேலும் இருபுதிய அணிகள்

லண்டன், பெப். 9

தென்வியட்நாமில் அமெரிக்காவின் பிரதான விமானத்தளமான டாஙுங்கையும் வடவியட்நாம் துருப்புக்கள் நெருங்கிக்கொண்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது. டாஙுங் விமானத் தளத்துக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தை வடவியட்ஞம் துருப்புக்கள் கைப்பற்றிக்கொண்டன.

கிராமத்திலிருந்த 30 அமெரிக்கர்களும் ஹெலிகொப்டர்களின் உதவியுடன் வெளியேற்றப்பட்டனர். கிராமத்தில் வாழ்ந்த 300 பேரும் இதற்கு முன்னரே தப்பிச்சென்றுவிட்டனர்.

மற்றொரு பிரதான அமெரிக்கத் தளமிருக்கும் கெயிஸாங் நகர் மீது வடவியட்ஞம் துருப்புக்கள் தாக்குதல் நடத்தியதாகவும் அதை அடுத்துள்ள மலையுச்சிக் காவல்நிலையத்தின் மீது வடவியட்நாமியர் தாக்குதல் நடத்தியபோது அமெரிக்கர் விரட்டியடித்துவிட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

ஹியூவில் ஒன்பது தினங்களாக தாக்குதல் நடத்திவரும் வியட்காங்கியருககு உதவியாக மேலும் இரண்டு புதிய அணிகள்வந்துள்ளன.

(5-ம் பக்கம் பார்க்க)

## கூட்டத்தில் கல்லெறி

## சுப்பிரமணியம்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதி

கோயம்புத்தூர், பெப். 9

தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித்தலைவர் திரு. சி. சுப்பிரமணியம் கல்லெறிக்கு இலக்காகி, காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவருடன் மற்றும் 12 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கோயம்புத்தூரில் காங்கிரஸ் கூட்டமொன்றின் போதே இந்தக்கல்லெறிச் சம்பவம் நடைபெற்றது. கோயம்புத்தூர்ஜில்லா காங்கிரஸ் கமிட்டி ஏற்பாடுசெய்திருந்த இக்கூட்டத்தின் போது 4,000க்குஅதிகமான மாணவர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்நடத்தினர். திறந்த ஜீப் கார் வண்டியில் தலைவர்கள் போய்க்கொண்டிருந்த போதும் கல்லெறிவீச்சு நடைபெற்றதாம். உதவி மந்திரி ஒருவரும் காயத்துக்காளானதாகத் தெரிகிறது.

காயத்துக்குள்ளான திரு. சி. சுப்பிரமணியமும் மற்றும் பன்னிருவரும் உடனடியாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். திரு. சுப்பிரமணியத்துக்கு மண்டையில் காயம் ஏற்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர் நேற்றுமாலை தினசரிப் பத்திரிகைக் காரியாலயமொன்

[5-ம் பக்கம் பார்க்க]

### திருமண அழைப்பு

மணமகன்:- Dr. S. T. காசிநாதன்

[சுன்னாகம் திரு. P. காசிநாதன், திருமதி காசிநாதன் அவர்களின் புதல்வன்]

மணமகள்:- Dr. பத்மினி சிவஞானரத்தினம்

[இளைப்பாறிய சுகாதார அத்தியட்சகர் Dr. K. சிவஞானரத்தினம், திருமதி P. சிவஞானரத்தினம் அவர்களின் புதல்வி]

இடம்:- நல்லூர் சிவன்கோவில்

காலம்:- தை மாதம் 29-ந் திகதி [12-2-68] திங்கட்கிழமை

நேரம்:- காலை 6-30மணி [மாங்கல்யதாரணம்].

விருந்துபசாரம்:- [1] மணமகளில்லம், 417, கே. கே. எஸ். ரோட், வண்ணார்பண்ணை. 12-2-68 மாலை 5-00 மணியளவில்

விருந்துபசாரம்- [2] மணமகனில்லம் சுன்னாகம், 13-2-68 மாலை 5-00 மணியளவில்

இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி உறவினர்களையும் நண்பர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

422 Dr. K. சிவஞானரத்தினம்

## நாகலிங்கம் மீண்டும் தலைவர்

யாழ்ப்பாணம், சனி

சுன்னாகம்பட்டினசபை தலைவராக முன்னாள் செனட்டரும், லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவருமான திரு. பொ. நாகலிங்கம் மீண்டும் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை சுன்னாகம் பட்டினசபை மண்டபத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் [illegible]

## சங்கானையில் மாலை முதல் காலைவரை ஊரடங்குஉத்தரவு

யாழ்ப்பாணம், சனி

சங்கானையில் இருதரப்பினருக்குமிடையில் நடைபெற்றுவரும் கலவரங்களின் எதிரொலியாக பொலிசார் இப்பகுதியில் ஊரடங்குச் சட்டத்தை நேற்றிரவு முதல் பிரகடனப்படுத்தியுள்ளனர். இச்சட்டத்தின் கீழ் மாலை 6 மணியிலிருந்து காலை 6 மணிவரை பொதுமக்கள் கூட்டமாகவோ, தனியாகவோ வீதிகளில் நின்றால் கைதுசெய்யப்படுவார்களென வடபகுதிப் பொலிஸ் சுப்பிரின்டண்ட் திரு. ஆர். சுந்தரலிங்கம் அறிவித்துள்ளார்.

இக்கலவரங்கள் நடைபெற்றுவரும இடமான நிற்சாமத்துக்கு திரு. ஆர். சுந்தரலிங்கம் நேற்றுக் காலை விஜயம் செய்தார். இதனைத் தொடர்ந்து நிற்சாமத்தில் சப்-இன்ஸ்பெக்டர் திரு. குணதிலகா தலைமையில் 10 பொலிசாரைக் கொண்ட பொலிஸ் நிலையம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது. சங்கானைச் சந்தையிலும் தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று நேற்று முதல் நிறுவப்பட்டுள்ளது.

(5ம் பக்கம் பார்க்க)

## அமைதியை மீறி ஊர்வலம் சென்றதாம்

சங்கானை, வெள்ளி

சங்கானையில் நேற்றிரவு இரு பகுதியினருக்கிடையே நடைபெற்ற கலவரத்தின் போது துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான 11பேர்காயங்களுக்குள்ளாகி யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 4பேர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளார்கள்.

ஒருவாரத்திற்கு முன்னர் இங்கு நடைபெற்றதுப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி இம்மாதம் 7-ம் திகதி மரணமான வன்னியன் குமரேசனின் பிரேத ஊர்வலத்தின் போதே இத்துப்பாக்கிச்சூடு நடைபெற்றதாக பொலிஸார் தெரிவித்தார்.

பொலிஸாரின் பாதுகாப்புடனேயே இந்த ஊர்வலம் நடைபெற்றதாகவும், பொலிஸார் அனுமதிவழங்கிய பாதையை விட்டு பிரேதஊர்வலம் வேறுபாதையால் சென்றபோதே ஊர்வலத்தைநோக்கி துப்பாக்கிச்சூடு நடைபெற்றதாகவும் ஊர்வலத்தில் சென்றவர்கள் சிவப்புக்கொடிகளை தாங்கிக்கொண்டுசென்றதாகவும் பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்[illegible]ளார்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான வைரமுத்து ஞானப்பிரகாசம், சுப்பிரமணியம், வைரவன் ஆகிய நால்வரும் உடனடியாகவே யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டுசெல்லப்பட்டனர்.

ஊர்வலத்தில் கொண்டு செல்லப்பட்ட குமரேசனின் பிரேதம் இக் கலவரங்கள் காரணமாக நடு வீதியிலேயே விட்டுச் செல்லப்பட்டதாகவும் பிரேத வண்டியிலேயே படுகாயமடைந்த நால்வரும் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும்தெரிகின்றது.

பொலிஸார் ஸ்தலத்துக்கு விரைந்துசென்று அமைதியை நிலைநாட்ட முயற்சிகளை மேற்கொண்டபோதிலும் தொடர்ந்தும் துப்பாக்கிச்சூட்டுச்சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்ததாகவும் தெரிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொக்கணை நீர்த்திட்டம் பூரணமாகிறது

புன்னாலைக்கட்டுவன்,
வெள்ளி

சுன்னாகம் மின்சார நிலையத்தை அடுத்துள்ள பொக்கணைப் பகுதியில் உப மின்சார நிலையமொன்று நிறுவப்பட்டுள்ளதை அடுத்து, புன்னாலைக்கட்டுவன், உரும்பராய், ஊரெழு ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் மட்டுமன்றி, விவசாயிகளின் பயிர்ச்செய்கைக்கு உதவியாக நீர் விநியோகத்துக்கான வசதிகளும் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

பொக்கணைப் புல்வெளிகளில் நெல் உற்பத்திசெய்வதற்கும், அதையடுத்த கிராமங்களில் பயிர்ச்செய்கைக்கான நீர்ப்பாசன வசதிகளையும் ஒருசில மாதங்களில் கிடைக்கவிருப்பதாகவும் உரும்பராய் பட்டினசபை உறுப்பினர் திரு. அ. காராளசிங்கம் கூறினார். காலகெதியில் பொக்கணைப் பகுதியிலுள்ள முடிக்குரிய நிலங்களை அயல் கிராமங்களிலுள்ள நிலமற்றவர்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள்மேற்கொள்ளப்படலாமென்றும் தெரிகிறது.

# 'அரசாங்கத்தை திட்டுவதற்கு பதில் ஏர்முனைநாடுக"

## முன்னாள் செனட்டர் கூறுகிறார்

புன்னாலைக்கட்டுவன்,
வெள்ளி

"வாழ்க்கைச் செலவு, அரிசி வெட்டு ஆகியவற்றுக்காக அரசாங்கத்தைத் திட்டுவதற்குப் பதில் ஏரைக் கைப்பிடித்து, உணவு உற்பத்தியை அதிகரிப்பது சாலச் சிறந்தது. அதுபோல உள்ளூராட்சி மன்றங்களுக்குரிய வரிகளைச் செலுத்திவிட்டு, உரிமையைக் கோருவது சிறந்தது."

இவ்வாறு முன்னாள் செனட்டர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் நேற்று முன்தினம் வழக்கறிஞர் ஆ. தனபாலசிங்கம் தலைமையில் உரும்பராய் பட்டினசபைத் தலைவர் திரு. எஸ். பத்மராசாவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் கூறினார்.

இக்கூட்டத்தில், அட்வக்கேட் திரு. கே. வி. எஸ். சண்முகநாதன், சி. குலசிங்கம், டாக்டர் கே. சிவஞானம் ஆகியோர் உரையாற்றினர்.

திரு. பத்மராசா, மேள வாத்திய ஊர்வலம் சகிதமாக ஞானோதயவாசிகசாலை வரை அழைத்துவரப்பட்டார். ஈற்றில் திரு. பத்மராசா நன்றி தெரிவித்தார்.

## WANTED
## A Male Clerk

Pass in S. S. C. or equivalent exam, with English.

Knowledge of typewriting and Book-Keeping.

Office Experience and Co-operative Training preferred.

Age : 26—35.

Salary : 100/- —175/-
7/50 × 10

with allowance prescribed by the Union.

Total initial earnings :
100/- + 101/60 + 17/50 = 219/10

If selected security in cash Rs. 1000/-

Application close on 29-2-68

"Application for Clerk" should appear on the top left hand corner of the envelope.

Apply under registered cover with two recent testimonials.

President,
Vali West M.P.C.S. Union,
Chankanai. 442

# வல்வெட்டித்துறை பட்டினசபை
# அறிவித்தல்

வல்வெட்டித்துறை பட்டினசபைத் தலைவரால் பின்வரும் ஒழுங்கைகளுக்கு திருத்தவேலைகள் செய்வதற்காக கேள்விப்பத்திரங்கள் 10-2-68-ம் தேதி தொடக்கம் 25-2-68-ம் தேதி முற்பகல் 10-00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்:-

1. தெனி ஒழுங்கை.
2. வன்னு ஒழுங்கை.

2. கேள்விப் பத்திரங்கள் 10-2-68 தேதி தொடக்கம் 24-2-68-ம் தேதி பிற்பகல் 2-30 மணிவரையும் பட்டினசபைக் காரியாலயத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

3. கேள்விப் பத்திரங்கள் பெறவிரும்புபவர்கள் அரசாங்கக் காரியாலயங்களிலிருந்தோ அல்லது உள்ளூராட்சி மன்றங்களிலிருந்தோ ஒப்பந்தக்காரர்களாக பதிவுசெய்யப்பட்டவர்களென்ற அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. கேள்விப் பத்திரங்கள் பெற்றுக்கொள்ள முன்பு கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியே நன்நம்பிக்கைப்பணமாக ரூபா 100/-ம் கேள்விப்பத்திரங்களுக்குரிய பணமாக ரூபா 15/-ம் செலுத்திப்பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப்பத்திரங்களுக்கு செலுத்திய பணம் திருப்பிக்கொடுக்கப்படமாட்டாது.

5. கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதியுடன் அனுப்பப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்களை அரக்கு முத்திரை இட்ட உறைகளில் இடதுபக்க மேல் மூலையில் ஒழுங்கையின் பெயரைக்குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலமோ அல்லது நேராகக்கொண்டுவந்தோ இக்காரியாலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்வி விண்ணப்பப்பெட்டிக்குள் போடப்படல் வேண்டும்.

6. எந்த அல்லது எல்லா விண்ணப்பங்களையும் நிராகரிக்கும் உரிமையும் ஒரு விண்ணப்பத்தின் எந்தப் பகுதியையும் ஏற்கும் உரிமையும் பட்டினசபைத் தலைவருக்கு உண்டு.

7. இன்னும் தேவையான விபரங்களைச் செயலாளரிடமிருந்து அந்தோர் நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. இரத்தினவடிவேல்,
தலைவர்,
பட்டினசபை, வல்வெட்டித்துறை.

பட்டினசபை அலுவலகம்,
வல்வெட்டித்துறை, 2-2-1968. 441

## விளம்பரம்

# தேவை

பண்டத்தரிப்புக் கோவிற்பற்று ப. நோ. கூ. சங்கங்களின் சமாசத்தினால் கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### 1. கணக்கு லிகிதர்

தகமைகள்:

[அ] விண்ணப்பதாரர் B.com. பட்டதாரியாக அல்லது அதற்குச் சமமான தராதரமுடையவராக இருத்தல் வேண்டும். கணக்கியல் [Accounts] கணக்குப் பதிவியல் [Book-keeping] என்பவவில் தராதரமுடையவர்கள் விசேடமாகக் கவனிக்கப்படுவர்.

[ஆ] 25 வயது துவக்கம் 40 வயது வரை.

[இ] சம்பளம்: ரூ. 250/- [எல்லாம் உட்பட].

[ஈ] பிணை: காசுப் பிணை ரூபா 1000/- [ஆயிரம்].

### II. காவலாளி

[அ] வயது: 30 வயதிற்கு மேற்பட்டவர்கள்.

[ஆ] காவல் வேலையில் அனுபவமுள்ளவர்கள்.

[இ] துவக்கு லைசன்ஸ் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் விசேடமாகக் கவனிக்கப்படும்.

(ஈ) சம்பளம்: ரூ. 75/- [எழுபத்தைந்து ரூபா எல்லாம் உட்பட]

விண்ணப்பங்கள் தலைவர், பண்டத்தரிப்புக் கோவிற்பற்றுப் ப. நோ. கூ. சங்கங்களின் சமாசம், பண்டத்தரிப்பு என்னும் முகவரிக்குப் பதிவுசெய்யப்பட்ட கடிதங்களில் 20-2-68-க்கு முன்பதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

தலைவர்
பண்டத்தரிப்புக்
கோவிற்பற்று ப. நோ. கூ.
ச. சமாசம்,
பண்டத்தரிப்பு.

7-2-68 439

## அறிவித்தல்
## பட்டினசபை சங்கானை ஆதன விற்பனவுகள்

சங்கானைப் பட்டினசபையால் ஆதன விற்பனவு பற்றி இப்பத்திரிகையில் 1968 ஆம் வருடம் ஜனவரி மாதம் 18 ஆம் திகதி வெளியாகிய விளம்பரத்தைத் தொடர்ந்து 10-2-68-ம் திகதி ஏலத்தில் விற்கப்படவேண்டிய பொருட்கள் 1968 ஆம் வருடம் பெப்ரவரி மாதம் 28-ம் திகதி முற்பகல் 10-00 மணிக்கு பட்டினசபை அலுவலகத்தில் ஏலத்தில் விற்கப்படும் என்பதை இத்தால் யாவருக்கும் தெரியப்படுத்துகின்றேன். மற்றும் விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

கி. க. திருச்சிற்றம்பலம்
தலைவர்,
பட்டினசபை, சங்கானை.

பட்டினசபை அலுவலகம்,
சங்கானை, 8-2-68. 440

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள சோமசெட் கார் விற்பனைக்
[illegible]
ஈழநாடு [illegible]
தவு. 1896

## வரி விளம்பரம்

### தேவை

டைப்ரைட்டர்

பயிற்சியாளரின் உபயோகத்துக்கு பாவித்த ஆங்கில, சிங்கள, தமிழ் டைப்ரைட்டர்கள் தேவை. வேலுப்பிள்ளை வர்த்தகக் கல்லூரி, (1924-ல் ஸ்தாபிக்கப்பட்டது) பருத்தித்துறை. 1888

கன்டீன் மேற்பார்வையாளர்களும், சமையற்காரர்களும் 1000 ஏக்கர் பண்ணையில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு சாப்பாடு வழங்கக்கூடியவகையில் கடமையாற்றுவதற்கு தேவை. நேரில் விண்ணப்பிக்கவும் ஏ. எம். ஆசீர்வாதம், ஊவாகுடஓயா, திஸமாரகம. 2090

காட்டுப்பகுதியில் மரம் அரிவதற்கு ஆட்கள்தேவை. (வாள் வைத்திருப்பவர் விரும்பத்தக்கது) வைர மரம் அரிவதற்கு 40 சதமும் நடுத்தர மரத்துக்கு 30 சதமும், மெதுமையான மரத்துக்கு 25 சதமும் வழங்கப்படும். வீட்டு வசதிகள் செய்துதரப்படும். பின்வரும் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். ஏ. எம். ஆசீர்வாதம், ஊவாகுட ஓயா, திஸமாரகம ஊடாக. 2089

பின்வரும் கட்டடச் சாமான்கள் தேவைப்படுகிறது. கீழ்வரும் விலாசத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டால் உடன் உரிய பணம் தரப்படும். தேவைப்படும் சாமான்கள் வருமாறு:-

(1) செங்கல் 4/6/9' ரூபா 30/-, ஆற்றுமணல்ரூ. 23/- கல் 1'' ரூ. 85/- 3/4'' ரூ. 100/-, 2'' ரூ. 40-/ எல்லாம் கியூப் கணக்கில். செங்கட்டிகள் 1000 ரூ. 65/- விதம். மூங்கில்கள் ஒன்று ரூ 1-50 விதம். காட்டு மரக்கப்புகள் வட்டவடிவமானவை 11' அல்லது அதற்கு மேல் ஒரு மரத்துக்கு ரூ 2/- ரப்பர் ஷீட்டுகள் 1'' ஒருசதுர அடி 22 சதம் 4''X2'' ஹாரிட்லூட் நீளம் 9' அல்லது அதற்கு மேல் 50 சதம் ஒரு கியூபிக் அடி. பின்வரும் ஸ்தாபனத்தில் ஒப்படைக்கப்படவேண்டும். 150, ஜோசப் வீதி, கிருண்ட்பாஸ், கொழும்பு. அல்லது 135, மீத்தோட்டமுல்ல வீதி, வெல்லம்பிட்டியா, கொலன்னாவா. 2088

### விற்பனைக்கு

வீடு:

மூன்று பரப்பில் புதிதாகக் கட்டிய உப்பரிகையுள்ள மாடி வீடு யாழ்ப்பாணம் புங்கங்குளம் ரோட்டில் நாகராஜா லேனில் விற்பனைக்குண்டு. மின்சாரம், குழாய்த் தண்ணீர், டிறெயினேச் குளிக்கும் அறை வசதிகளுடன் மாடியிலும், கீழ்வீட்டிலும் ஆறு விசாலமான அறைகளும் கராச்சும் உண்டு. வாங்குவோர்க்குக் கடன் வசதியுமுண்டு. விரும்புவோர் பக்கத்துவீட்டில் விசாரிக்கவும். விபரங்கட்கு திரு. ப. நாகராசா, 154, W. A சில்வமாவத்த வெள்ளவத்தை. 1882

### காணவில்லை

14-1-68-ல் கொழும்பிலிருந்து வந்த தபால் புகைவண்டியில் பார்க்கர் C. Sironmany என்று விலாசம் பொறிக்கப்பட்ட பேனை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் என்னிடம் ஒப்படைத்தால் ரூபா 25/- கொடுக்கப்படும். செ. தல்லையசிங்கம், ஆசிரியர், அனலைதிவு. 1894

### கல்வி

இலங்கையில் தமிழ் சுருக்கெழுத்தை ஆரம்பித்தவரும், ஆங்கில சுருக்கெழுத்தை 46 வருடங்களாகக் கற்பித்தவருமான வேலுப்பிள்ளை இரு சுருக்கெழுத்தையும் மிக இலகுவான முறையில் கற்பிக்கின்றார். தற்போது ஐம்பது மாணவர்களுக்கு மேல் படிக்கிறார்கள். இலங்கையில் தமிழ் ஆங்கிலசுருக்கெழுத்தாளர், திட்டச்சாளராகக் கடமையாற்றுபவர்களில் கூடுதலானோர் இக்கல்லூரியில் பயின்றவர்களாகும். பார்வையிட்டு உடன்சேர்ந்து படிக்கவும். வர்த்தகக் கல்லூரி, பருத்தித்துறை [1924-ல் ஸ்தாபிக்கப்பட்டது] 1887

# சாம்ராஜ்ய குழு இலங்கை விஜயம்

லண்டன், பெப். 9

12 இளைஞர்களையும் இரு யுவதிகளையும் கொண்ட ராயல் சாம்ராஜ்ய சங்கக் குழு ஒன்று அடுத்தமாதம் இலங்கைக்கு விஜயம்செய்யவிருக்கிறது.

இந்தக் கோஷ்டியினர் ஒரு மாதகாலம் வரையில் நல்லெண்ண விஜயத்தை மேற்கொண்டு பாகிஸ்தான், இந்தியா, இலங்கை போன்ற நாடுகளுக்கு சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்ளவிருக்கிறார்கள். தனிப்பட்ட தொடர்புகள் மூலம் நல்லெண்ணத்தையும் நட்புறவையும் வளர்ப்பதுடன் விஜயம் செய்யும் நாடுகள்பற்றித் தகவல்களை சேகரிப்பதே இவர்களது விஜயத்தின் நோக்கமாகும்.

சாம்ராஜ்ய சங்கத்தின் நூற்றாண்டு பூர்த்தி வைபவத்தை முன்னிட்டு இந்த நல்லெண்ண சுற்றுப்பிரயாணத்தை மேற்கொள்ளும் இவர்கள் இம்மாதம் 16-ம் திகதி விமானமூலம் புறப்படுவார்கள். பாகிஸ்தானிலும், இந்தியாவிலும் தமது சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு இவர்கள் மார்ச் மாதம் 15-ம் திகதி கொழும்புக்கு வருவார்கள். இலங்கையில் இவர்கள் நான்கு தினங்கள் வரை தங்கியிருப்பார்கள்.

# "நாவலர் பாடசாலையென மாற்றுக"

கோப்பாய், வெள்ளி

இதுகாலவரை கோப்பாய் இந்து தமிழ்க்கலவன் பாடசாலையென வழங்கிவந்த பெயரை நாவலர் பாடசாலையென மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு மேற்படி பாடசாலை பெற்றோர் — ஆசிரிய சங்கமும், பழைய மாணவர் சங்கமும் ஒருமித்து கோப்பாய் எம். பி. திரு. சி. கதிரவேற்பிள்ளையிடம் கோரியுள்ளன.

# மகாசிவராத்திரி

கோப்பாய், வெள்ளி

கோப்பாய் வீரபத்திர சுவாமி கோவிலில் இம்மாதம் 26-ந் திகதி மகாசிவராத்திரி விழாவை வழமைபோல் சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன.

பகல் சகஸ்ரசங்காபிஷேகமும், இரவுமுழுவதும்பஜனை சங்கீதக்கச்சேரி, கதாப்பிரசங்கங்கள், சொற்பொழிவுகள் முதலியன நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடவியட்னுமின் முக்கிய பட்டினங்களான

# ஹனேய், ஹைபாங் பகுதிகளில் குண்டு வீச்சு நடாத்த முடிவு?



## முன்னைய கட்டுப்பாட்டை ஜோன்ஸன் அகற்றினர்!

வாஷிங்டன், பெப். 9

**வடவியட்னுமின் முக்கிய பட்டினங்களான ஹனேய், ஹைபாங் பகுதிகள் மீது குண்டு வீசுவதில்லையென்ற கட்டுப்பாட்டை அமெரிக்க ஜனதிபதி ஜோன்ஸன் அகற்றியிருப்பதாக இங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.**

சில வாரங்களுக்கு முன்னர் ஹனேய், ஹைபாங் பகுதிகள் மீது குண்டுவீசுவதில்லையென்றதீர்மானத்தை தென்வியட்னுமில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான நிலைமையைத் தொடர்ந்து திரு. ஜோன்ஸன் இப்போது மாற்றியுள்ளதாக வாஷிங்டன் செய்திகள் கூறுகின்றன.

அதிகாரபூர்வமாக உறுதி செய்யப்படாத இந்தச் செய்தி இருந்தாலும், அமெரிக்க ஜனதிபதி வெள்ளை மாளிகையில் அதிகாரிகள் பலருடன் நடாத்திய பல மணிநேர யோசனைகளிலிருந்தும், கிடைக்கும் செய்திகளிலிருந்தும் இந்த முடிவுசெய்யப்பட்டுள்ளதாக தெரியவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவை அமைதிப் பேச்சுக்கு அழைக்கிறது வடவியட்னும்

ஹனேய், பெப். 9

தென்வியட்னுமில் வடவியட்னும் துரிதமுன்னேற்றம் அடைந்துகொண்டிருக்கும் நேரத்தில் நேற்று வடவியட்னும் வெளியுறவு மந்திரி அமெரிக்காவுக்கு ஒரு கோரிக்கையை விடுத்திருந்தார்.

அமெரிக்கா வடவியட்னும் மீது நிபந்தனையின்றிகுண்டு வீச்சை நிறுத்தினல், அமைதிப் பேச்சுவார்த்தைக்குத் தாம் தயாராக இருப்பதாக வடவியட்னும் வெளியுறவு மந்திரி தெரிவித்துள்ளார். தென்வியட்னுமில் தமக்கு வெற்றி வேகமாகக் கிடைத்துக்கொண்டிருக்கும் இந்த நேரத்தில்கூட தாம் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு விரும்புவதை சுட்டிக்காட்டிய வடவியட்னும் வெளியுறவு மந்திரி, அமெரிக்கா நிபந்தனையின்றி முதலில் குண்டுவீச்சை நிறுத்த வேண்டும் என்ருர்.

"அமெரிக்காவின்

## தேசிய நலனுக்காகவா வியட்னும் யுத்தம்?"

### செனட்டர் கென்னடி கேட்கிருர்

வாஷிங்டன், பெப். 9

தேசிய நலனைக்கருதியே வியட்னும் யுத்தம் நடைபெறுகிறதென்று அமெரிக்க ஜனதிபதி ஜோன்சன் கூறியிருக்கும்கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும், அதனை அவர் மாற்றிக்கொள்ளவேண்டுமென்றும் காலஞ்சென்ற முன்னுள் அமெரிக்க ஜனதிபதி திரு. ஜோன் எவ். கென்னடியின் தம்பியார் செனட்டர்ரொபர்ட் கென்னடி தெரிவித்துள்ளார்.

நேற்று செனட்டர் கென்னடி நிருபர்களுக்கு வியட்னும் யுத்தம்பற்றி பேட்டியளித்தபோதே மேற்கண்டவாறு சொன்னர்.

வியட்னும் யுத்தத்தில் திரு. ஜோன்சன் கடைப்பிடிக்கும் கொள்கைகளையும் அவரின்போக்கையும்செனட்டர் கென்னடி வன்மையாகக் கண்டித்தார்.

அமெரிக்காவின் நலனுக்காகத்தான் வியட்னும் யுத்தம் என்று திரு. ஜோன்சன் சொல்லுகிருரே, அதை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும்? என்று செனட்டர் கென்னடி கேட்டார்.

## யு தாண்ட்-இந்திரா பேச்சு வார்த்தை

புதுடில்லி, பெப். 9

ஐக்கிய நாட்டுப் பொதுக் காரியதரிசி திரு. யுதாண்டும், இந்தியப் பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியும் நேற்று சிலநிமிட நேரம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினுர்கள்.

இங்கு நடைபெறும் ஐ நா.வின் -வது வர்த்தக அபிவிருத்தி சம்பந்தமான மகாநாட்டில் கலந்துகொள்வதற்காக நேற்று இங்கு வந்து சேர்ந்த யுதாண்ட் ஸ்ரீமதி இந்திராகாந்தியுடன் பல்வேறு விஷயங்கள் குறித்துப் பேசினுர்.

வியட்னும யுத்தமும்அவர்கள் பேச்சுவார்த்தையில் இடம்பெற்றது. மோசமான நிலையை அடைந்துகொண்டுபோகும் வியட்னும் யுத்தத்துக்கான பரிகாரம் குறித்தும் திரு. யுதாண்டும், ஸ்ரீமதி இந்திராகாந்தியும் பேசினுர்கள்.

இந்திய வர்த்தக அமைச்சர் திரு, தினேஷ்சிங்கையும் திரு. யுதாண்ட சந்தித்துப் பேசினுர். திரு. யுதாண்ட் 3 தினங்கள் இந்தியாவில் தங்கியிருப்பார்.

### மகாநாடு

நேற்று நள்ளிரவுவரை வர்த்தக அபிவிருத்தி மகாநாடு தொடர்ந்து நடைபெற்றது. இதில் 5[illegible] நாடுகள் [illegible]த்தில் கலந்துகொண்டுள்ளன.

### வட கொரியா பிரதமர் கூறுகிருர்

லண்டன், பெப். 9

'பியூபுலோ' விவகாரத்தைத் தொடர்ந்து அமெரிக்கா தம்மை அச்சுறுத்திக் கொண்டிருப்பதாக வட கொரியாப் பிரதமர் தெரிவித்துள்ளார். ஆனல் தாம் எந்தவிதமான பயமுறுத்தலையும் சமாளிப்பதற்குத் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

### தென் கொரியாவுக்கு 10 கோடி டாலர்

அமெரிக்கா வழங்கும்

வாஷிங்டன், பெப். 9

வட கொரியா கொரில்லா தாக்குதல்களைச் சமாளிப்பதற்கு அமெரிக்கா தென் கொரியாவுக்கு 10 கோடி டாலர் கொடுக்கவிருக்கிறது. இதனை அமெரிக்க [illegible] ஜோன்ஸன் அறிவித்துள்ளார்.

### கனடா உதவி


ஒட்டாவ, பெப். 9

கனடா, பாரதத்துக்கு 2 கோடி 11 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவை வட்டியில்லாக் கடனுக வழங்க முன்வந்துள்ளது. பாரதத்தின் கணக்குப்படி இது 14 கோடியே 70 லட்சம் ரூபாய் ஆகும். 50 ஆண்டுகளில் இக் கடன் திருப்பிக் கொடுக்கப்படும்.

### கம்யூனிஸ்ட் தீர்மானம்

பட்ன, பெப். 9

ஜனநாயகத்தை நாட்டில் பாதுகாக்க ஒரு இயக்கம் தேவை என்ற தீர்மானம் இங்கு நடைபெறும் 8-வது வருடாந்த கம்யூனிஸ்ட்மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மனிதன் தன் ஆணவத்தால், தன்னால் எல்லாம் செய்ய முடியுமென்று நினைக்கிறான். ஆனால் அனுபவம் ஏற ஏற, தன்னால் ஆவது ஒன்றுமில்லையென்பதை உணர்ந்து, ''தெய்வமே எல்லாம் உன் செயல்'' என்று சரணடைகின்றான்.

— சுவாமி ராமதாஸ்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389

யாழ்ப்பாணம் பிலவங்கஹு தை மீ 27உ (10-2-68)


## அரசியல் விவேகம்

மாவட்ட சபை மசோதா இன்னும் கருவிலேயே சரியாக உருவாகவில்லை. அது உருப்படியாவதற்கு முன்பே அதற்கு பலத்த எதிர்ப்புத் தோன்றியுள்ளது. சிங்களவர் மட்டுமல்ல, தமிழரிலும் ஒரு பகுதியினர் அதை எதிர்க்கின்றனர். இந்த இலட்சணத்தில் அம்மசோதா சட்டமாக நிறைவேறினாலும் அதனால் தமிழருக்கோ நாட்டுக்கோ எவ்வித நன்மையும் ஏற்படுமா என்பது சந்தேகம்.

முன்னாள் உயர் நீதிமன்ற தலைமை நீதியரசர் பஸநாயகா அவர்கள், இம்மசோதாவின் விவரம் தெரிவதற்கு முன்பாகவே அதைக் கண்டித்து பிரசாரம் செய்கிறார். சமஷ்டிக் கொள்கை இதில் அடங்கியுள்ளதாம். தமிழரசுக் கட்சியினரை மட்டும் கலந்து யோசித்து இதைப் பிரதமர் கொண்டுவருவதாயும், சிங்களவர் தங்கள் கருத்தை இவ்விஷயமாகத் தெரிவிக்க முடியாமல் தடுக்கப்படுவதாயும், இது ஜனநாயகத்துக்கு மாறென்றும கண்டிக்கிறார் பிரதமர் இதற்கு அளித்துள்ள ஆணித்தரமான பதிலில் இம்மசோதாசரிவர இன்னும் தயாரிக்கப்படவில்லையென்றும், மந்திரி சபையும், அரசாங்கக் கட்சியும், பின்னர் பார்லிமெண்ட் சபையும், நிரந்தர 'ஏ' கமிட்டியும் இதை விவாதிக்க இருப்பதாயும், இந்நிலையில் இது பற்றி ஏதேதோ கற்பனை செய்து கொண்டு ஆதாரமற்ற புகார்களைக் கூறுவது ''ஒரு பெரிய தேசிய குற்றமாகாதா?'' என்று சரியாகக் கேட்கின்றார்.

பிரதமர் டட்லி சேனநாயக்கா ஒரு சிங்களவர். அவரது மந்திரிசபையிலே ஒரேஒரு தமிழர்தான் உள்ளார். சிங்களவரான பிரதமர், சிங்களப் பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட தமது சிங்கள சகாக்களுடன், கலந்து யோசித்து ஒரு மசோதாவைத் தயாரித்து வருகையில் இவ்விஷயமாக சிங்களமக்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்க அனுமதிக்கப்படவில்லை என்று பொறுப்பு வாய்ந்த ஒரு தலைவர் கூறுவது நமக்குப் புரியவில்லை. பிரதமர் உள்ளிட்டு அவர்களெல்லாரும் சிங்களவரல்லவென்பது அவரது கருத்தா? அவரும் அவரது சகாக்களும்தான் சிங்களவரா? அரசியல் நோக்கத்துக்காக வகுப்பு வெறியைக் கிளப்பிவிடக்கூடியபேச்சுகளைப் பேசி, நாட்டின் ஒற்றுமையையும், அமைதியையும் குலைக்கும்படியான அறிக்கை வெளியிடுவது அவர்போன்றஒரு பொறுப்புள்ளவருக்கு அழகாகாது. நாட்டில் ஜனநாயகம் பலப்பட்டு வளருவதற்கும் இவ்வித மனப்பான்மை உதவ முடியாது.

மாவட்டசபைகள் தமிழ்ப் பகுதிகளுக்கு மட்டுமல்ல, நாடனைத்துக்குமே இருக்கும். ஆகவே இது தமிழருக்கு மட்டும் எவ்விதத்திலும் விசேஷ சலுகை காட்டுவதாகாது. மேலும்தலைமை அரசாங்கத்தின் அதிகாரத்துக்கு உட்பட்டே இச்சபைகள் இயங்குமென்றும், நிலங்களை விநியோகிக்கும் உரிமையும் அவற்றுக்கு இராதென்றும், சொல்லப்படுகிறது. உண்மை அதிகாரமற்ற இச்சபைகள் இப்போதுள்ள தலத்தாபனங்களுக்குள்ள அதிகாரங்களைகூட இல்லாமலிருக்குமோ என்று அஞ்சப்படுகிறது. அதிகாரங்களை ஆங்காங்கேயுள்ள மக்கள் கையிலேயே ஒப்புவித்து நிர்வகிக்கச் செய்வது தான் வளர்ச்சிக்கும் அமைதிக்கும் உகந்ததென்பது ஜனநாயகத்தின் அடிப்படைக் கொள்கை. பிரிட்டனிலும்கூட 'கவுண்டி கவுன்ஸில்'களுக்கு கல்வி, பொலிஸ் முதலிய பல அதிகாரங்களும் அளிக்கப்பட்டுள்ளன. ஒருபிரதேச மக்கள் தங்களுக்குத் தேவையானதைச்செய்து கொள்ள முடியும். இடமிருக்கும். அதற்கு இடமில்லாமல், அதிகாரமற்ற பொம்மை சபைகளை நிறுவுவதால் என்ன பயன்? தமிழர்கள் இதனால் எப்படித் திருப்தி அடைய முடியும்?

இப்போதுள்ள அரசியல் அமைப்பையே திருத்தியமைக்க ஓர் அரசியல் சீர்திருத்த சபையைப் பார்லிமெண்ட் நியமித்துள்ளது. இவ்விஷயமும் அரசியல் அமைப்பு சம்பந்தப்பட்டதுதான். ஆகவே இதையும் அச்சபையின் பார்வைக்கே ஏன் விட்டுவிடக்கூடாது? எதிர்க்கட்சியினர் விரிவான அரசியல் நிர்ணய சபை வேண்டுமென்கின்றனர். அவ்விதசபை அமைக்கப்படுமாயின், அதனிடம் இப்பொறுப்பையும் ஒப்புவிக்கலாம். எதிர்க்கட்சியினருடன், பிரதமர் நேரில் கலந்து பேசி, நாட்டின் அரசியல் அமைப்பை தயாரிப்பது பற்றி சுமுகமான முடிவைச் செய்வதே அரசியல் விவேகமாகும்.

## நியமனம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

சில்லாலை புதிய கட்டளைக் குரவராக வண. ஸ்பம்பதி நியமனம் பெற்றுள்ளார்

குளமங்கால் கட்டளைக்குரவராக வண. டெலாசே நியமனம் பெற்றுள்ளார்.

ஆசிரியருக்கு கடிதம்

# பொதுவான இடத்தில் நாவலருக்கு உருவச்சிலை

நாவலர் ஒருதன்னலமற்ற தமிழ்த்துறவி. தன் கடமை தமிழுக்கும் சைவத்துக்கும் நாட்டு மக்களுக்கும் பணி செய்வதே என்று வாழ்ந்த பெருமகன், காவியுடுத்துக் கானகத்துக்கு ஓடிச் செல்லாது, மக்களிடமிருந்து ஒதுங்கி வாழாது சாதாரண தொண்டனாகமக்களிடையே வாழ்ந்து மக்கள் நலனுக்காகப் பாடுபட்டு அரசியல் சமூகத்தொண்டுகளில் சிறிதளவேனும் ஈடுபட்டு மறைந்த ஒரு மகான்.

நாவலர்பெருமான் யாழ்ப்பாணம் இலங்கை என்ற எல்லைக்குள் அடங்காது சைவம் போற்றிய நால்வர் தோன்றிய தமிழகத்திலே சைவத்தைப் போற்றி வளர்த்தவர் என்று கூறியிருப்பது முற்றிலும் உண்மையானதே. எனவே நாவலர் உலகப் பெருமக்கள் பட்டியலிலே சேர்க்கப்பட வேண்டியவர் என்பது சொல்லாமலே விளங்கும்.

நாவலர் பெருமான் தமிழுக்கும் சைவத்துக்கும்மாத்திரம் சொந்தமானவரல்ல. அவர் உலகத்துக்கே சொந்தமானவர். நாவலர் ஒரு தேசியத் திருமகன். அவரது பல தொண்டுகளிலும் சைவமும் தமிழும் தொக்கி நிற்கின்றன. உலகப் பெருமகனர் ஒருவரை நாம் ஏன் சைவத்துக்குள் மாத்திரம் அடக்க வேண்டும். நாவலரின் அரிய பலவித தொண்டுகளைப் பல கோணங்களிலிருந்து நோக்க வேண்டும். அவர் காலத்துக் கண்ணாடி போட்டுக் கொண்டு பார்க்க வேண்டும், தென்னிந்தியப் பேராசிரியர் திரு. மாயாண்டி பாரதியவர்கள் தாம் எழுதிய ''நாவலர் பெருமான்'' என்ற சிறிய நூலில் பல விடங்களில் நமது நாவலரவர்களை உலக மகான்களின் வரிசையில் வைத்துப் போற்றத் தக்கவர் என்பதைச் சிறப்புற விளக்கியிருக்கின்றார் நாவலரது அனேக தொண்டுகளில் சைவத்துக்கும் தமிழுக்கும் செய்த தொண்டு மிகச் சிறப்பானது என்பதை யாரும் மறப்பதற்கில்லை. நாவலர் கிறிஸ்தவ பைபிள் நூலை மொழி பெயர்த்ததின் மூலம் கிறிஸ்தவ சமயத்துக்கே தொண்டு செய்த சைவராகின்றார். இதனால் அவரது சைவத் தொண்டும் தமிழ்த் தொண்டும் பிரகாசித்ததேயன்றிக் குன்றவில்லை.

நாவலர் சிலை சைவசமயத்துக்கும் தமிழ் மொழியின் தூய்மைக்கும பேர் போன யாழ்ப்பாணத்தில் பொது மக்கள் உலக மக்கள் எல்லோரும் கூடும் ஓர் இடத்தில் அமைவதே மிகவும் பொருத்தமானதாகும். தன்னலமற்ற மகான் ஒருவரை நாம் சைவத்துக்குள் மாத்திரம் கட்டுப்படுத்துவது தவறு. கிறிஸ்தவ சமயத்தவர்கள்தங்கள்வேத நூல் பைபிள் மொழிபெயர்ப்பைச் சிறந்த முறையில் செய்ததின் மூலம் தங்கள் சமயத்துக்கும் தொண்டு செய்திருக்கின்றார், நாவலர். ஆகவே தாங்களும் நாவலருக்குச் சிலையமைத்துக் கௌரவிக்கப் போகின்றோம் என்று முன்வந்தால் சைவ சமயத்தவர்களாகிய நாங்கள் ''இல்லைஅவர் உங்களுக்குத் தொண்டு செய்யவில்லை. நீங்கள் அவருக்குச் சிலையமைத்துக் கௌரவிக்கக் கூடாது'' என்று ஆட்சேபனை பண்ணப் போகிறோமா? அப்படியான குறுகிய மனப்பான்மை கொண்டவர்களா சைவ சமயத்தவர்களாகிய நாங்கள்.

நாவலர் படம் பொறிக்கப்பட்ட தண்டுப் பிரசுரங்கள், பத்திரிகைகள் சில நேரங்களில் கசாப்புக் கடைகளுக்கே சென்று இறைச்சி சுற்றிப் பார்சல் பண்ணப் பயன் படுத்தப்படுகின்றன. இதை நாம் கட்டுப்படுத்த முடியுமா? இதனால் நாவலர் பெருமை குறைந்து விட்டதா? சிலர் தெய்வமெனப் போற்றப்படும் நாவலர் சிலை ஏன் மழைக்கும் வெய்யிலுக்கும் காகம் குருவி எச்சத்துக்கும் உள்ளாக்க வேண்டுமென்று வாதிக்கக் கூடும். இவ்விடைஞ்சல்களைத் தடுக்கவும் வழிவகைக உண்டு. மறுசமயத்தவர்கள் தங்கள் பெரியார்களின் சிலைகளைத் திறந்த வெளியில் கண்ணாடிப்பேழைக்குள் வைத்துப பேணி காக்கின்றனரே. அப்படிச் செய்தாலென்ன? சைவமத தெய்வங்கள் கூட வெய்யிலிலும் மழையிலும் பனியிலும் குளிரிலும் இருப்பதைக் காண்கின்றோமே இதைத் தடுப்பாரில்லையா.

நாவலர் சைவம் தமிழ் ஆகிய இரண்டுக்கும் மாத்திரம் செய்த தொண்டுகளுடன் நின்றுவிடாமல் தேசியதொண்டுகள் சமூகத் தொண்டுகள் கூடச்செய்திருக்கின்றார். எனவேதான் ஈழதேசத்தில் தமிழ்தேசிய வீரர்கள் பட்டியில் முதன்மை கொடுத்துப் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவர் இதற்குரிய காரணங்களை விளக்கி எழுதிய ''நாவலர் தேசிய வீரர்'' என்ற எனது கட்டுரை 14-12-65லன்று வெளியாகிய 'ஈழநாடு' தினசரிப் பத்திரிகையில் வெளிவந்தது. இந்நாட்டுச் சுகாதார அமைச்சின் இன்றைய நிரந்தரச்செயலாளர் உயர்திரு கு. பாலசிங்கமவர்கள் இலங்கைத் தகவல் திணைக்களம் வெளியிட்டுவரும் ''இன்றைய இலங்கை'' என்னும் ஆங்கில மாத சஞ்சிகையில் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாத இதழில் ''இந்துசமய வெற்றி வீரர் என்ற தலையங்கத்தின் கீழ் நாவலரைப்பற்றி மிகச் சிறப்பாக எழுதிய கட்டுரையினால் அனைத்துலகும் நமது

இச் சஞ்சிகை வெளிநாடுகளில்தான் ஏராளமாக விற்பனையாகிறது. நாவலரை அறிந்து கொள்ள முடிந்தது எனவே பிறநாட்டு மக்கள் நாவலர் பிறந்த நாட்டை, வாழ்ந்த இடத்தை, அவர் படத்தை அல்லது உருவத்தைப் பார்க்க வருவாராயின் நாவலருக்கு ஒருபொது இடத்தில் சிலையில்லாது போனால் எதை நாம் காட்ட முடியும். இதனால் தான் இலங்கை அரசாங்கம் நாவலர் படம் கொண்ட முத்திரையொன்றும் வெளியிடச் செய்ய வேண்டுமென்றும் வற்புறுத்துகிறோம்.

நாவலரை நாம் மாத்திரம் அறிந்து கொள்ளாமல் பிறசமயத்தவர்களும், பிறசதி சமூகத்தினரும், வெளிநாட்டவரும் அந்நியரும் அறிந்து கொள்ள வேண்டும். மறைவாக நமக்குள்ளே நாவலர் கதைகள் சொல்வதிலோரி மகிமையில்லை. திறமான அவர் சரிதம் வெளிநாட்டோர் அறிதல் வேண்டும். நல்ல நாவன்மை படைத்தோர் நாவலர் சரித்திரத்தை உலக மொழிகளில் எழுத முன்வர வேண்டும். இவைகளுக்கு வழிவகுத்தவர்கள் தேசியப் பற்றும், சமயப் ப... மொழிப்பற்றும் கொ... சில அரசாங்க ஊ... களே. 1965-ல் தலை... கிய கொழும்பு மாந... நாவலர் பெருமானு... பெருவிழா எடுத்த நா... தேசிய வீரர் என்ற ... த்தை நிலைநாட்டியவ... ஆர்வமிக்க சில அரச... ஊழியர்களே. 1965... முன் நாவலரை உலக... செய்ய யாரும் மு... வில்லை. இந்த நாட்... மகா தேசாதிபதியவர்... பெரும்பான்மை மக்... கிய சிங்களச் சகோதர... (பல அரசியல் வாதி... உட்பட) பலரும் நாவ... அறிந்து போற்றுமவ... குச் சேவைசெய்தவ... அரசாங்க ஊழியர்கள...

நாவலர் ஒரு ... மனிதர். பொதும... தொண்டர். ... தொண்டுகளைச் சை... தமிழ் என்ற இரண்டு... நிறுதிக் கொள்ளவி... அப்பாலும் சென்று ... கரிய பல செயல்க... செய்த செம்மல். ஆ... பொதுமக்கள்ஒருபொது... த்தில் நிலைநாட்டிக் ... விக்கட்டும். அதுவே ... தது. சகல மக்களுக்... பொதுவான இடம் யா... பாணம் பொதுசன நூ... முன்றில்தான்.

வெ. க. நடரா...

கொழும்பு.

## யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களுக்கு ரூ. 34 ஆயிரம்

### சென்றவருடத்தில் கிடைத்துள்ளது

யாழ்ப்பாணம், சனி

யாழ். மாவட்டத்தில்பதிவு செய்யப்பட்டுள்ள சுமார் 389 சன சமூக நிலையங்களுக்கு நன்கொடைப் பணமாக சென்ற வருடம் சுமார் 34 ஆயிரத்து 245 ரூபாவை அரசாங்கம் வழங்கியுள்ளதாக கிராம முன்னேற்றப் பகுதி தெரிவித்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் சுமார் 425 சனசமூக நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் சுமார் 389 சனசமூக நிலையங்களே பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும், காலப் போக்கில் சிறப்பாகநடைபெற்றுவரும் ஏனைய சனசமூக நிலையங்களுக்கும் அரசாங்கம் நன்கொடைப் பணம் கொடுக்க முன்வரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

முன்னேற்றம் அடையாத கிராமங்களில் சனசமூகநிலையங்களை உருவாக்கி அவற்றின் மூலம் கலை, கலாச்சாரம், உடற்பயிற்சி ஆகியனவற்றை நல்ல முறையில் செயல் படுத்தி அவற்றின் மூலம் கிராமங்களை நகரங்களாக்கும் நோக்கத்துடனேயே அரசாங்கம் நாட்டில் உள்ள சகல சனசமூக நிலையங்களுக்கும் நன்கொடைப்பணம் அளிக்க முயன்றுவருவதாகவும். இந்த நோக்கம் வெற்றி பெற ஒவ்வொரு சனசமூகநிலையங்களும்நல்ல முறையில்செயல்படுவதனாலேயே முடியும் என்றும் ஒரு அதிகாரி தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களில் வலிகாமம் தெற்கில் 74சனசமூக நிலையங்களும், வடமராட்சிப் பகுதியில் 70சனசமூக நிலையங்களும்' தீவுப்பகுதியில் 65 சனசமூக நிலையங்களும், கரச்சிப்பகுதியில் 14 சனசமூக நிலையங்களும், நெடுந்தீவில் 5சனசமூக நிலையங்களும், தெல்லிப்பளையில் 80சனசமூக நிலையங்களும், வலிகாமம் மேற்கில் 70சனசமூக நிலையங்களும், பளையில் 70சனசமூக நிலையங்களும், பூநகரியில் 12சனசமூக நிலையங்களும், யாழ்ப்பாணத்தில் 40சனசமூக நிலையங்களும், துணுக்காயில் 10 சனசமூக நிலையங்களும். சாவகச்சேரியில் 50சனசமூக நிலையங்களும், கோப்பாயில் 55சனசமூக நிலையங்களும் அரசாங்கக் கண்காணிப்பில் [illegible] இருந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

[வி. நி.]

## மகா வித்தியாலய மாகதரம் உயர்வு

வட்டுக்கோட்டை, வெள்ளி.

அராலி தெற்கு சரஸ்வதி வித்தியாசாலை இம்மாதத்திலிருந்து மகா வித்தியாலய மாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இப் பாடசாலையைத்தர முயர்த்து வதற்கு ஆவன செய்யுமாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஏ. [illegible] தனர்.

## இன்றைய பல...

[10-2-68]

சனிக்கிழமை

[தை மீ 27 உ]

திதி: ஏகாதசிபகல் 12-... மேல்துவாதசி.

நட்சத்திரம்: மிருக... டப.காலை 7-19மேல் தி... வாதிரை.

ராகுகாலம்: 9-35-... 11-05.

சுபநேரம்: 3-35— 5-...

இன்று பிறந்தவர்... ளுக்கு- நீண்டநாள் கன... நனவாகும். நெடுந்தூர... பயணத்துக்கு இடமுண்... கொடுக்கல்வாங்கல்தொ... லைகள் தோன்றிமறையு... அரசியல்வாதிகளுக்... அலுப்புத்தட்டும். இத்... றையில் புதிய தாக்குத... களைச் சமாளிக்கவேண்... யேற்படும். குடும்பம் சு... யாகத்தோன்றினும் மு... வில் அமைதிக்கு இ... முண்டு. வீண் செலவை... தவிர்க்கவும்.

மேடம்-நிதி வசதிபெ... கும், நேர்மை வெல்லும்...

ரிஷபம்-மனக்குழப்பப்... திரை மறைவில் பகை.

மிதுனம்- அவசரமுடிவ... அதல் வழித்துன்பம்.

கடகம்- பணம் பத்து... செய்யும் படாடோபம்.

சிம்மம்- மோசடி நட... கும், விழிப்புடன்இரு.

கன்னி- கலைஞர்களுக்... கௌரவம், கஸ்புமிகுதி...

துலாம்-பாக்கியவிருத்தி... பரம்பொருள்சிந்தை.

விருச்சிகம் - அன்னி... வாசம், அகாலபோசன...

தனுசு- இன்பத்துடிப்பு... இதயங்கள் இணையும்.

மகரம் - குடும்பத்தில்... பிணி, தொழிலிலும் ம... தம்.

கும்பம்- தெய்வம் துணை... நிற்கும், தடைகள் தவிடு... பொடி.

மீனம் - செய்தொழில்... சிறப்பு, செல்வாக்குப்... பெருகும்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மயப் பற்றும்
றும் கொண்ட
ாங்க ஊழியர்
5-ல் தலைநகரா
ம்பு மாநகரிலே
பெருமானுக்குப்
எடுத்து நாவலர்
ர் என்ற கரு
லநாட்டியவர்கள்
சில அரசாங்க
ள. 1965-க்கு
லரை உலகறியச்
ாரும் முன்வர
இந்த நாட்டின்
திபதியவர்களும்
மை மக்களா
ச் சகோதரர்கள்
ரியல் வாதிகள்
லரும் நாவலரை
போற்றுமளவிற்
வைசெய்தவர்கள்
ஊழியர்களே.

ஒரு பொது
பொதுமக்கள்
ர். தனது
ளைச் சைவம்
ற இரண்டுடன்
ா க ள வி ல் லை.
சென்று செயற்
செயல்களைச்
ம்மல். ஆகவே
ள்ஒருபொதுஇட
நாட்டிக் கௌர
. அதுவே சிறந்
ல மக்களுக்கும்
ன இடம் யாழ்ப்
பொதுசன நூலக
ன்.

வ. க. நடராசா.

## றைய பலன்

[10-2-68]
ிக்கிழமை
ு மீ 27 வு
ாதசிபகல் 12-20
ாதசி.
திரம்: மிருகசிரி
7-19மேல் திரு

ாலம்: 9-35—
ரம்:3-35—5-05

பிறந்தவர்க
நீண்டநாள் கனவு
ும். நெடுந்தூரப்
துக்கு இடமுண்டு.
ல்வாங்கல்தொல்
தான்றிமறையும்.
வாதிகளுக்கு
த்தட்டும். இத்து
புதிய தாக்குதல்
சமாளிக்கவேண்டி
ம்.குடும்பம் சுமை
தான்றினும் முடி
ஆமைதிக்கு இட
வின் செலவைதி
வும்.

ம்-நிதி வசதிபெரு
ர்மை வெல்லும்.
ம்-மனக்குழப்பம்,
றைவில் பகை.
ம்- அவசரமுடிவு,
ழித்துன்பம்.
ம்- பணம் பத்தும்
் படாடோபம்.
ம்- மோசடி நடக்
ிப்புடன்இரு.
- கலைஞர்களுக்கு
ம், களிப்புமிகுதி.
ம்-பாக்கியவிருத்தி
ாருள்சிந்தை
சிகம் - அன்னிய
அகால போசனம்
- இன்பத்துடிப்பு,
கள் இணையும்.
ம் - குடும்பத்தில்
தொழிலிலும் மந்

ம்- தெய்வம் துணை
, தடைகள் தவிடு

- செய்தொழில்
செல்வாக்குப்
ம்.

திட.க்கலாநிதி —
ல வேலுப்பிள்ளை

# யாழ்ப்பாணத்தில் நீச்சல் தடாகங்கள் அரசாங்கம் அமைக்கும்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் சுமார் 7 நீச்சல்தடாகங்களை அரசாங்கம் அமைக்கலாமெனத் தெரிகின்றது. இதற்கான முன்னேற்பாடுகளைக் கவனித்து தகுந்த இடங்களைப் பரிசீலனைசெய்யும்பொருட்டு இலங்கை அரசாங்க தேசிய நீச்சல் பயிற்சி போதனாசிரியரான திரு. கைரிடமென் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தார்.

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டுப் பகுதிபோதனாசிரியர் திரு. யேசுதாசனின் அழைப்பின்பேரில் இங்கு விஜயம் செய்த திரு. கைரிடமென் இங்குள்ள பல கடல்களைப் பார்வையிட்டார். பருத்தித்துறை கடலுக்கு விஜயம் செய்த இவர் இங்குள்ள 'வாடி' வீட்டுக்கு அருகிலுள்ள கடல்பகுதியையும், ஊர்காவற்றுறையில் சுங்க இலாகாவுக்கு முன்னுலுள்ள கடல் பகுதியையும் அல்லைப்பிட்டி, பாம்பீச், கீரிமலை ஆகிய இடங்களிலுள்ள கடல்பகுதிகளிலும் நீச்சல் தடாகங்கள் அமைக்கமுடியுமென ஆலோசனை தெரிவித்தார்.

யாழ்ப்பாணம்கோட்டைக்குள்ளிருக்கும் சிறு கடலிலும் யாழ்.மாவட்டத்தில் சிறந்தொரு நீச்சல் தடாகத்தை அமைக்கமுடியுமென நம்பிக்கை தெரிவித்த திரு. கைரிடமென் இதுபற்றித் தாம் வேண்டிய நடவடிக்கைகளை விரைவில் மேற்கொள்வதாக உறுதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர சபை வளவின் பின்பக்கத்தில் அலுப்பாந்திக்கடலுக்கு அருகாமையில் இருக்கும் ஒல்லாந்து காலத்தில் இயங்கிய இடுகாட்டிலும் சிறந்த ஒருநீச்சல்தடாகத்தைஅமைக்கலாம் என்று யாழ்ப்பாண மாநகர முன்னுள் மேயர் திரு. அல்பிரட்துரையப்பா திரு. கைரிடமென்னிடம் தெரிவித்தார். திரு. கைரிடமென்னும் அந்த இடத்தைச் சென்று பார்வையிட்டார். யாழ்ப்பாணம் பழைய பூங்காவிலுள்ள கேணியையும் ஒரு நீச்சல் தடாகமாக்கலாம் என அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகராவும் சிபார்சுசெய்தார்.

இரு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த திரு. கைரிடமென் கீரிமலையில் இளைஞர்களுக்கு நீச்சல் பயிற்சி வகுப்புகளையும்நடத்தினுர். சுமார் 50 வாலிபர்கள் இதில் வந்துகொண்டனர். பயிற்சி வகுப்புகளின் பின்னர் திரு. கைரிடமென் இங்கு பேசுகையில், "இங்குள்ள வாலிபர்கள் நீச்சலில் மிகச் சுறுசுறுப்பானவர்களாகக் காணப்படுகின்றுர்கள் என்றும், போதிய பயிற்சி அளித்தால் இவர்களால் சர்வதேச நீச்சல் போட்டிகளிலும் கலந்து வெற்றியீட்டமுடியும் என்றும் தெரிவித்தார். (கா.நி)

## கேரள முதன் மந்திரிக்கு தண்டனை

திருவனந்தபுரம், பெப். 9

நீதிமன்றத்தை அவமதித்தாக குற்றஞ்சாட்டித் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கில் கேரள முதன்மந்திரி திரு. நம்பூதிரிபாத்துக்கு 1000 ரூபாய் அபராதம் அல்லது 1 மாதக் கடுழியச் சிறைத்தண்டனை விதித்து கேரள உயர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. வழக்கறிஞர் சபை அங்கத்தவர் திரு. ஆனந்தநாராணநம்பியார் இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

# "இளைஞர்களுக்கு முன் மாதிரியாக திகழ்கிறீர்" மிருசுவில் பெண்களுக்கு சாவகச்சேரி எம். பி. பாராட்டு

சாவகச்சேரி, வெள்ளி

பொருளாதார அரசியல் சுதந்திரம் பெற்றிருந்தால் அந்நாடு உயர்ந்து விட்டதெனக் கூற முடியாது. நாட்டின் உயர்ச்சிக்கு அந்நாட்டு மக்களின் பண்பும், சுயமரியாதையும் தன்நம்பிக்கையும் அத்தியாவசியமானது. இம்மூன்றும் உங்களிடமிருந்தமையால் தான் காடாய் மேடாய்க் கிடந்த இந்நிலத்தை வளம் கொழிக்கும் சோலையாக்கியிருக்கிறீர். உங்கள் விடாமுயற்சியினையும் அயராத உழைப்பினையும் காணும் இக்கால நாகரீக இளைஞர் தாம் கால் சட்டை அணிந்து உத்தியோகம் வேண்டுமென வீதிகளில் திரிவதை விட்டு விவசாயத்தில் நிச்சயமாக ஈடுபடுவர்.

மிருசுவில் பெண்கள் குடியேற்றத் திட்டத்திற்கு நேற்று விஜயம் செய்த சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் அங்கு நடாத்தப்பட்ட கூட்டத்தில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினுர்.

கி. சாந்தமூர்த்தி தலைமையில் நடாத்தப்பட்ட இக்கூட்டத்தில் எம். பி. உட்படப் பலர் உரையாற்றினர்.

தண்ணீர் வசதியீனமாக இருப்பதாகவும் கிணறு, மெஷின், கால்வாய் ஆகியன அமைத்துத் தரவேண்டுமெனவும், தமக்கு வீடு கட்டுவதற்கு வழங்கப்படவிருக்கும் ரூபா 1250 போதாதெனவும் அதனுல் அரசாங்கமே வீடு கட்டித்தரும்படியும், மின்சாரவசதி, டெலிபோன் ஆகியன வழங்கும்படியும் மிருசுவில் பெண்கள் குடியேற்றத்திட்டத்திற்கு யாழ்-கண்டி வீதியிலிருந்து பிரிந்து செல்லும் இடத்தில் கடுகதிப் பஸ்களையும் நிற்பாட்ட ஆவன செய்யும்படியும் மிருசுவில் பெண்கள் குடியேற்றத்திட்டத்தில் குடியேறியுள்ள பெண்கள் எம். பி.யிடம் கோரினர். எம். பி. தாம் ஆவன செய்வதாகக் கூறினுர். குடியேற்றத்திட்டத்திற்கு நெசவு யந்திரம் வேண்டுமெனவும் அதன் மூலம் ஓய்வு நேரத்தையும் நல்ல வழியில் பயன்படுத்தலாமெனவும் கூறினர்.

## சுப்பிரமணியம்...

(1-ம் பக்கமும் பார்க்க)

நுக்குள் நுழைந்து பத்திரிகைகளையும், பொருட்களையும் சேதப்படுத்தினுர்களாம். ஆனுலும்பொலிஸார் வந்ததால், நிலைமைசமாளிக்கப்பட்டதாம். ஆயுதம் தாங்கிய பொலிஸார் காவல்புரிகின்றனர்.

தியேட்டர் ஒன்றுக்கு முன்னுல் ஆர்ப்பாட்டக்காரர் சென்று அங்கிருந்த விளம்பரப்பலகையை நாசமாக்கியதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன.

## டாஙு.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சைகோனில் மீண்டும் வியட்காங்கியர் கடும் தாக்குதல் நடத்திவருகின்றனர். சைகோனில் பத்தாயிரம் வீடுகள் அழிந்துவிட்டதாகவும் சைகோனில் சோலன் என்ற இடத்தில் வியட்காங்கியரை அமெரிக்க தென்வியட்நாம் துருப்புகள் விரட்டியடித்துவிட்டதாகவும் ஒருசெய்தி கூறுகிறது.

## பஸ்நிலைய பொறுப்பதிகாரி

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் இ. போ. ச. பஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக, திரு. ரி. தேவராசா நும்மாதத்திலிருந்து நியமனம் பெற்றுள்ளார்.

## சேர். ராஸீக்பரீத்

குரும்பசிட்டி, வெள்ளி

யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்த சேர். ராஸீக் பரீத் வியாழக்கிழமை காலை வேலணை மண்கும்பான் பள்ளிவாசலுக்குச் சென்றிருந்தார். இவருடன் யாழ். முஸ்லீம் சமூக சேவைச்சங்க அங்கத்தவர்களும் கூடப் போயிருந்தனர். சேர். ரஸீக் பரீத் தமது இரண்டு நாள் யாழ்ப்பாண விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று நண்பகல் விமானத்தில் கொழும்பு திரும்பினுர்,

## புதிய நிர்வாகிகள்

நாவற்குழி, வெள்ளி

நாவற்குழி சனசமூக நிலையத்தின் ஆண்டுக் கூட்டம் அரசினர் மகா வித்தியாலய மண்டபத்தில் தலைவர் திரு. த. தியாகராசா தலைமையில் நடைபெற்றது. இவ்வாண்டின் புதிய உத்தியோகத்தர்களாகப் பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. த. தியாகராசா, காரியதரிசி செல்வன் கு. சுப்பிரமணியம், தனாதிகாரி திரு. க. தியாகராசா, நூல்நிலையபொறுப்பாளர் திரு. பொ. நடராசா 6பேர் கொண்ட நிர்வாக சபையும் அமைக்கப்பட்டது.

# சங்கானையில் ஊரடங்கு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இங்கு நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற பிரேத ஊர்வலம் ஒன்றில் நடந்த துப்பாக்கிச் சூட்டினுல் படுகாயமுற்ற 11 பேரில் வைரமுத்து, ஞானப்பிரகாசம் ஆகிய இருவரின் நிலைமையும் மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர்களுக்கு நேற்று அதிகாலை அவசரசத்திரசிகிச்சை செய்யப்பட்டது.

இக்கலவரத்தினுல் பிரேத ஊர்வலம் இடையில் நிறுத்தப்பட்டு பிரேதம் வீதியிலேயே கவனிப்பாரின்றி விட்டுச் செல்லப்பட்டபோதிலும் நேற்று முன்தினம் இரவு உதவி பொலிஸ் சுப்பிரின்டனட் திரு லியனகே தலைமையில் ஸ்தலத்துக்கு விரைந்து சென்ற ஆயுதம் தாங்கிய பொலிசால் அங்கு தொடர்ந்து அசம்பாவிதம் ஏற்படாவண்ணம் நிலைமையைக் கண்காணித்து பிரேதத்தை மீண்டும் தக்னக்கிரியைக்காக எடுத்துச் சென்றனர்.

நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இத்துப்பாக்கிச் சூடு சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை.

யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமைக் காரியாலயத்திலிருந்தும் மேலும் சுமார் 25 பொலிசார் சங்கானையில் விசேஷமாகக் கடமையாற்ற நேற்றுக் காலை அனுப்பப்பட்டனர்.

### 50 பேர் கைதாகி விடுதலை

சங்கானையில் சென்ற சில தினங்களாக நடைபெற்று வரும் கலவரங்கள் சம்பந்தமாக மொத்தம் 50 பேரை பொலிசார் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட அனைவரும் பின்னர் மல்லாகம் மாஜிஸ்டிரேட்டினுல் எச்சரித்து விடுதலைசெய்யப்பட்டனர்.

வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தின் உத்தரவின் பேரில் சங்கானை பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டயஸ் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் இந்த ஐம்பது பேரையும் கைதுசெய்தனர். கலவரங்களைத் தூண்ட ஆதரவாகவிருந்ததாகவும், சமாதானத்துக்குப் பங்கம் விளைவித்ததாகவும் சந்தேகத்தின் பேரில் கலவரத்திலீடுபட்ட இருதரப்பிலிருந்தும் 25 பேர் வீதம் 50 பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

மல்லாகம் மாஜிஸ்டிரேட் திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் இவர்கள் ஆஜர்செய்யப்பட்டபின்னர் இவர்களைஎச்சரிக்கைசெய்த மாஜிஸ்டிரேட் எந்த வேளையிலும் கலவரங்களைத் தூண்டினுல் மீண்டும் இவர்கள் கைதுசெய்யப்பட்டு ரிமாண்டில் வைக்கப்படுவார்கள் என எச்சரித்தார்.

இக்கலவரங்கள் சம்பந்தமாக ஏற்கனவே 11 பேர் ரிமண்டில் வைக்கப்பட்டுள்ளனர். (கா. நி.)

# ஐயாறன் எழுதுகிறது

சென்ற சில நாட்களாக இரவில் கடும் பனியும், குளிரும். நேற்று அதிகாலை பஜனைச் சத்தம் கேட்டு எழுந்தேன். மார்கழி மாதம் முடிந்தும், காலை பஜனை நடப்பதைப் பற்றி விசாரித்ததில், வைத்தீஸ்வர வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆறுமுகம் மாஸ்டர், திரும்பி யாழ்ப்பாணத்துக்கு மாற்றலாகி வந்துவிட்டதாயும் அவரே இக்காலை பஜனைக் கோஷ்டியையும் வெள்ளிக்கிழமைகளில் நடத்துவதாக அறிந்தேன். பலேபலே!

எட்டியாந்தோட்டைக்கு மாற்றப்பட்டுச் சென்ற அவரை, வைத்தீஸ்வரப் பெருமான் மீண்டும் இங்கு கொண்டுவந்துவிட்டார். அவர் சீக்கிரத்தில் தமிழகம் சென்று தேவாரப் பயிற்சியும், கதாப்பிரசங்கப் பயிற்சியும் பெறவிருப்பதாக அறிந்தேன். அவர் நல்ல பயிற்சிபெற்றுவந்தால் இவ்வித பணிகளுக்கு இன்னும் அதிக பயன்படலாம்.

ஃ ஃ

தமிழகத்திலே ஓர் ஊரில் கூட்டுப்பிரார்த்தனை பஜனை சபையின் ஆண்டுவிழா நடந்தது மார்கழியில் தெருப் பஜனை சென்ற குழந்தைகளுக்குப் பரிசுகள் வழங்குவதாக அறிவித்திருந்தனர். சென்று பார்த்தேன் எல்லாரும் பெண் குழந்தைகளே. என்ன பரிசு தெரியுமா? 50 சதம் மதிப்புள்ள ஒரு செலிலாய்டு சோப்புப் பெட்டி! அதுவும் சிலருக்கு கொடுத்துவிட்டு மற்றப் பெண்களுக்கு இல்லையென்று சொல்லி விரட்டிவிட்டனர்! இதைப் பார்க்க மிகவும் வருத்தமாக இருந்தது.

ஒரு மாதமும் ... காலையில் குளியல் எழுந்து தெருச் சுற்றி, ... குழந்தைகளுக்கு நல்ல பரிசு அளிக்கப்படாதா? இதில் ஏன் இவ்வளவு தரித்திர புத்தி! முடிவில் அந்த விழாவிலே சுண்டல்கூடக் கிடையாது. மாலையிலிருந்து இரவு 8மணிக்கு மேல் காத்திருந்த அக்குழந்தைகள் பசியுடன் திரும்பினர். பாவம். பெரும் பாவம்.

நம் ஈழத்திலே இவ்வித குழந்தைகளுக்குப் பலபல மதிப்புள்ள பரிசுகளை வழங்கி, நல்ல உணவுகளையும் அளிப்பதைக் கண்டிருக்கின்றேன். தமிழகத்துக்கு இவ்வகையில் ஈழம் வழிகாட்டியாக இருப்பதை உணரப் பெருமையாகவும், மகிழ்ச்சியாகவுமுள்ளது.

ஃ ஃ

தமிழ் பேசும் ஒரு செக்கோஸ்லேவிய வாலிபரைச் சென்னை தமிழ் விழாவில் சந்தித்தேன். 25 வயதுள்ள அவரது பெயர் ஜான் பிலிப்ஸ்கி. அவர் தலத்தாபன அமைச்சர் தம்பதிகளின் அழைப்புக்கிணங்க இப்போது இலங்கைவந்துள்ளதாயும், அவர் அனுராதபுரம், பொலன்னறுவை, சிகிரியா, திருகோணமலை முதலிய இடங்களுக்குச் சென்றுவிட்டு யாழ்ப்பாணம் வருவதாகவும், செக். ஸ்தானிகராலய அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

அவ்வாலிபரைச் சென்னை தமிழ்விழாவில் சந்தித்தேன் சற்றே கட்டினுலும் நல்ல தமிழில் பேசுகின்றுர். "ஏன் ... கேட்டதற்கு அம்மொழி ... ஆசையாக இருந்தது" என்றார். அவருக்கு ஏழு மொழிகள் தெரியுமாம். இப்போது சிங்களம் கற்கிறுர். தென் இந்தியா, இலங்கை இந்நாடுகளில் சுற்றி, அதன் சரித்திரத்தைச் செக். மொழியில் எழுதப்போவதாகச் சொன்னுர். யாழ்ப்பாணம் வருகையில், 'ஈழநாடு' காரியாலயத்துக்கு வருமாறு அழைத்தேன். அவருக்கு நினைப்பு இருக்கிறதோ என்னவோ!

இங்கு வந்தால், உண்மை விவரங்களை அவருக்குச் சொல்லலாமல்லவா? நம்மைப் பற்றிய உண்மைகளை அறிய அறிவாளிகளான இவ்வித வெள்ளைக்கார வாலிபர்களுக்கு எவ்வளவு ஆவல்!

ஃ ஃ

சைவத்த செவ்வுருவன்
திரு நீற்றன்னுரு மேற்றன்,
கைவைத் தொரு சிலையால் அரண் மூன்றும் மெரி செய்தான்,
தெய்வத் தவர் தொழு தேத்திய குழகன் திருச்சுழியல்
மெய் வைத்தடி நினைவார் வினை தீர்தல் வெளிதன்றே.

—ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள்

(சிவாகமங்களிற் சொல்லப்பட்ட வேடத்தை யுடைய சிவந்த திருமேனியையுடையவனுய்த் திருநீற்றை யணிபவனும், இடிபோலும் குரலை உடைய இடபத்தை உடையவனும், கையின்கண் வைத்த ஒரு வில்லாலே மூன்று கோட்டைகளையும் எரித்தவனும், தெய்வத்தன்மை உடைய தவத்தோர் வணங்கித் துதிக்கின்ற அழகனும் ஆகிய இறைவனது திருச்சுழியலை உள்ளத்துள் வைத்து அவனது திருவடியை நினைப்பவரது வினைகள் நீங்குதல் எளிது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யானை அடையாள குளிர் பாறுதிகள்




| இப்பத்திரிகை போட்டிக்காக தரும் நம்பகமான யோசனை | நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவை | போட்டியில் கலந்து கொள்வோர் தயவுசெய்து இதை கவனமாகப் படிக்கவும். |
|---|---|---|
| எலிபன்ட் மார்க் குளிர்பான போத்தல் மூடிகளை சேகரித்துக் கொண்டே இருங்கள்.<br><br>போத்தல் மூடியில் உள்ள தக்கையை மிகக் கவனமாக அகற்றி உள்தகட்டில் ஒரு ஆங்கில எழுத்து இருக்கின்றதா எனப் பாருங்கள். அப்படி ஒரு எழுத்து இருந்தால் எறிந்து விடாதீர்கள். எத்தனை எழுத்துக்கள் சேர்க்க முடியுமோ அத்தனை எழுத்துக்களையும் சேகரியுங்கள். | ஏன் எலிபன்ட் மார்க் குளிர்பானங்கள் இலங்கையில் மிகவும் சுத்தமானவை எனப் போற்றப்படுகின்றன.<br><br>இராப் போஜனம், களியாட்டங்கள், குழந்தைகளின் பிறந்ததினம், கல்யாணம் முதலிய வைபவங்களுக்கு உணவு சிற்றுண்டி பரிமாற ஏன் எலிபன்ட் ஹவுஸ் ஸ்தாபனத்தையே எல்லோரும் நாடுகிறார்கள் எனத் தெரியுமா? | உங்களுக்கு வழமையாக யானை மார்க் குளிர் பானங்களை அளிக்கும் கடையோ, கிளப்போ, சினிமாவோ, ஹோட்டலோ அல்லது வேறு இடமேதுமிருந்தால் அங்கு உங்களுக்குப் பிடித்தமான சிப்பந்தியின் பெயரையும் விலாசத்தையும் குறித்துக் கொள்ளுங்கள். இப்போட்டியில் நீங்கள் பரிசுபெற்றால், அவரும் பெருந்தொகையான பரிசைப் பெறத் தகுதியுடையவராவார். |

ரொக்கமாக 3·0 பரிசுகள் வென்றாக வேண்டும் — அதுவரை இப்போட்டியின் முடிவுதிகதி குறிப்பிடப்படமாட்டா — இது ஆறுமாதம் வரை எடுக்கலாம்.

## எலிபன்ட் ஹவுஸ்

CCS

சிலோன் கோல்ட் ஸ்டோர்ஸ் லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மூன்று திக்குகளையும் நோக்கி பொலிசார்சுடுவதைப்பார்த்தேன்"

## வல்வை இளைஞன் கொலைவழக்கில் சாட்சியம்

வல்வெட்டித்துறை, வியா.

'சம்பவதினத்தன்றுபொலிசாரும் ராணுவத்தினரும் சனங்களுக்கு பொல்லால் அடித்ததையும் இராசதுரையின் கடைக்கு கற்களால் எறிவதையும் பொலிசார் மூன்று திசைகளையும்நோக்கி துப்பாக்கியால் சுடுவதையும் எனது சகோதரரான நாகரத்தினம் வீட்டு வாசலில் நின்று பார்த்துக்கொண்டுநின்ற நான், உடனே வீட்டிற்குள் சென்று டெலிபோன்மூலம் யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரிண்டனுக்கு பார்த்த சம்பவத்தைத் தெரிவித்தேன்' என வல்வெட்டித்துறையைச் சேர்ந்த வியாபாரியான சின்னத்தம்பி சந்திரசேகரம் என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராசா முன்னிலையில் நடைபெற்ற விசாரணையின்போது கூறினர்.

இவ்வழக்கில் வல்வெட்டித்துறையைச்சேர்ந்த ஆர். சிவஞானசுந்தரம் என்ற இளைஞனை கடந்த வருடம் ஏப்ரல் மாதம்8-ந்திகதி 303 பொலிஸ் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாகவும் அதற்கு உடந்தையாகவிருந்ததாகவும் கொழும்பு டிட்போ பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. எஸ்.வி. பத்திராஜுமீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

சந்திரசேகரம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:— 'நான்வல்வெட்டித்துறையில் வசித்து வருகிறேன். வியாபாரம் செய்வது எனது தொழில். சம்பவம் நடந்ததினம்ஞாபகமிருக்கிறது. அன்று இரவு 7 மணியளவில் எனது சகோதரரான நாகரத்தினம் என்பவருடையவீட்டில் இருந்தேன். அன்று இரவு 7-45 மணியளவில்சனங்கள்ரோட்டால் குளறிக்கொண்டு போகிறசத்தம் கேட்டது. சத்தம்கேட்டதும் கதவைத் திறந்து வெளியில் வந்து பார்த்தேன். அந்நேரத்தில் பொலிசாரும் ராணுவத்தினரும் சனங்களுக்கு அடிப்பதைக் கண்டேன். அச்சமயத்தில் அவ்விடத்தில் நூறு பேர்வரை நின்று கொண்டிருந்தனர். உடனே வீட்டின் மேல்மாடிக்குச் சென்று டெலிபோன்மூலம் யாழ்ப்பாணம் பொலிஸ் சுப்பிரின்டனுக்கு பொலிசாரும் ராணுவத்தினரும் சனங்களுக்கு அடிக்கிறதாகச் சொன்னேன். பின்னர் மேல்மாடியிலுள்ள பல்கணி மூலம் வெளியில் நடப்பதைப் பார்த்தபோது பொலிசார் காங்கேசன்துறைவீதி, பருத்தித்துறைவீதி, உடுப்பிட்டிவீதி ஆகிய திசைகளை நோக்கி சுட்டுக்கொண்டு நின்றனர். பொலிசாரால் பலமுறைகளில் அவ்விடங்களை நோக்கிச் சுடப்பட்டதைப்பார்த்தேன். சுடுகிற சம்பவம் பற்றியும்இரண்டாவதுதரம் டெலிபோன் மூலம் தெரிவித்து ஸ்தலத்திற்கு நேரடியாக வந்து பார்க்கும் படியும் கேட்டேன். டெலிபோன் செய்துவிட்டு மேல்மாடியில் நின்றே வெளியில் பார்த்தபோது சுடுவது நிறுத்தப்பட்டிருந்தது. அந்நேரத்தில் அவ்விடத்தில் பொலிசாரையும் ராணுவத்தினரையும் தவிரவேறு ஒருவரும் அவ்விடத்தில் உலாவிக்கொண்டிருக்கவில்லை. அந்நேரத்தில் அவ்விடம் அமைதியாக இருக்கக் காணப்பட்டது அமைதி நிலவிக்கொண்டிருந்த சமயத்தில் உடுப்பிட்டி பாதைசந்தியை நோக்கி ஒரு வான் வந்து கொண்டிருந்தது. அந்த வான் நான் நின்றுகொண்டிருந்த வீட்டையும்கடந்து சென்றது. அந்நேரத்தில் ரோட்டின் எதிரியும் வேறு இருபொலிஸ்காரரும் நின்று கொண்டிருந்தனர். சென்று கொண்டிருந்த வானை எதிரி கையைக்காட்டி தடுத்துநிறுத்தினர். நிறுத்தப்பட்டதும் வானில் இடதுபக்கத்திலிருந்து ஒரு வளர்ந்தஆள் இறங்கினர். இறங்கியவரை எதிரி பொல்லால் அடித்தார். அந்நேரத்தில் எதிரிக்குப் பக்கத்தில் இரு பொலிஸ்காரர்கள் நின்றனர். வானிலிருந்துஇறங்கிய வளர்ந்த ஆள் அடியைவாங்கிக்கொண்டு பின்வாங்கிக் கொண்டு சென்றார். அப்போழுது பெண் மலசலகூட வாசலில் நின்றுகொண்ட பொலிஸ்ராரர்அவரைச்சுட்டார். உடனே ஐரியாஎன்று நிலத்தில் விழுந்தார். வான் சாரதி வலது பக்கத்தால் இறங்கி ஓடியதையும் கண்டேன். வளர்ந்தஆள் நிலத்தில் விழுந்ததைப்பற்றி எஸ்.பிக்கு அறிவிப்பதற்கு டெலிபோன் எடுத்தபோது டெலிபோன் எடுக்கமுடியாமல் இருந்தது அதன்பின் நான் படுக்கைக்குச் சென்றுவிட்டேன். காலை நான்கு ஐந்து மணியளவில் படுக்கையிலிருந்து எழும்பினேன். அழுகிறசத்தம் கேட்டது. விழுந்தவர் இடத்திற்குப் போனபோது அவர் இறந்துவிட்டதாக அறிந்தேன். இறந்தவரை எனக்குத்தெரியும். அவரின் பெயர் சிவஞானசுந்தரம். அன்று ஸ்தலத்திற்கு வந்த மாஜிஸ்டிரேட்டுக்கு வாக்குமூலமளிக்கப் போவதாகச் சொன்னேன். அவர் பொலிசாருக்குக் கொடுக்கும்படி சொன்னர் அதன்படிபொலிசுக்கு முறைப்பாடு கொடுத்தேன்'.

முத்தையா வல்லிபுரம் என்பவரும் சாட்சியமளித்தார்.

# தேசியசுவீப்முடிவுகள்

நேற்று நடைபெற்றதேசிய லொத்தர்சபையின் 180வது சுவீப்முடிவுகளின் விபரம் வருமாறு:—

**1-வது பரிசு**

42 F 0942 ரூ. 100,000

**2-வது பரிசு**

26 Q 0921 ரூ. 40,000

**3-வது பரிசு**

18 U 0227 ரூ. 10,000

தலா ரூ.844 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம்;

| | |
|---|---|
| 09 H 0498 | 04 A 0062 |
| 41 B 0819 | 26 S 0685 |
| 11 F 0685 | 45 K 0889 |
| 10 P 0589 | 04 M 0497 |
| 12 L 0309 | 12 Q 0056 |
| 24 N 0313 | 40 B 0102 |
| 30 F 0962 | 34 C 0079 |
| 33 G 0141 | 06 Z 042[illegible] |
| 15 O 0163 | 13 X 0785 |
| 48 J 0658 | 45 J 0343 |
| 09 X 0186 | 05 Y 0825 |
| 25 H 0133 | 18 C 0544 |
| 37 R 0057 | 48 J 0258 |
| 24 A 0202 | 02 A 0038 |
| 39 O 0821 | 19 Y 0528 |
| 41 D 0237 | 13 D 0832 |
| 35 B 0273 | 38 A 0653 |
| 32 G 0999 | 46 E 0467 |
| 11 N 0834 | 06 P 0225 |
| 18 J 0148 | 02 G 0534 |
| 01 U 0319 | 22 K 0954 |
| 30 Y 0683 | 41 B 0017 |
| 05 C 0351 | 16 W 0452 |
| 20 D 0330 | 10 F 0672 |
| 35 C 0374 | 10 Y 0608 |
| 39 U 0170 | 26 U 0780 |
| 19 K 0985 | 42 O 0606 |
| 29 V 0108 | 11 M 0682 |
| 29 R 0951 | 46 M 021[illegible] |
| 32 U 0768 | 33 T 0032 |
| 21 A 0396 | 36 F 0709 |
| 30 W 0172 | 16 D 0091 |
| 13 M 0116 | 07 Q 0550 |
| 40 E 0968 | 03 V 0350 |
| 42 Z 0121 | 09 Q 0125 |
| 02 R 0293 | 16 N 0206 |
| 21 D 0862 | 25 N 0734 |
| 29 T 0103 | 16 D 0971 |
| 02 V 0769 | 11 V 0738 |
| 17 F 0484 | 09 W 0741 |
| 87 B 0922 | 30 J 0338 |
| 37 H 0101 | 40 L 0603 |
| 11 O 0754 | 34 Y 0099 |
| 27 E 0714 | 41 S 0567 |
| 03 G 0099 | 08 N 0359 |
| 26 B 0636 | 26 G 0504 |
| 43 L 0972 | 20 X 0564 |
| 30 E 0535 | 30 K 0421 |
| 07 H 0072 | 04 H 0327 |
| 26 O 0488 | 02 G 0061 |

(இவை உறுதிப்படுத்தப் படவேண்டியவை)

# 'சிவஞான திருவுடன் நட்புறவு எதுவும் இல்லை'

## புனிதவதி கொலைவழக்கில் இளைஞன் சாட்சியம்

குரும்பசிட்டி, வியாழன்

"இறந்தவரை எனக்கு நன்கு தெரியும். மாயவன் என அழைக்கப்படும் முதலாம் எதிரியையும் தெரியும். சம்பவதினம் தொல்புரத்திலுள்ள கலைவாணி சனசமூகநிலையத்தில் சரஸ்வதிபூசைவிழா நடைபெற்றது. இவ்விழாவிற்குப்போயிருந்த நான் முதல் எதிரியும் அங்கே இருந்ததைக் கண்டேன். காலஞ்சென்றவரது வீட்டுக்கு அழைப்பதன் பேரில் வேலைகள் செய்வதற்கு செல்லுவது வழக்கம். இறந்தவரின் மகளான சிவஞானதிருவை எனக்குத் தெரியும். சிவஞானதிருவுக்கும் எனக்குமிடையே நட்புறவோ, காதல் உறவுகளோ இல்லை. சிவஞான திருவுடன் சகஜமாகப் பேசுவதில்லை. சில அலுவல்களைப் பொறுத்தே தேவையேற்படும் நேரத்தில் மட்டும் கதைப்பது உண்டு. எனக்குத் தெரிந்தவரை என்னுடைய மாமன் வேலன இறந்தவரது வீட்டில் இரவு நேரம்தங்கியிருப்பதும் படுப்பதும்இல்லை. வேலைகள் செய்வதற்கு போகும் வேளைகளில் என் தயார் சின்னப்பிள்ளை இறந்தவர் வீட்டில் உறங்குவது உண்டு சுகவீனம் காரணமாக சம்பவம் நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் இவ்வழக்கத்தைத் தாயாரும் நிறுத்திவிட்டார்."

மல்லாகம் நீதிபதி திரு. எஸ். சண்முகலிங்கம் முன்னிலையில் புனிதவதி கொலை வழக்கு தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம் சாட்சியமளித்த கொத்தன் கோகிலான் வயது 23 என்ற வாலிபர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

தொல்புரத்தைச் சேர்ந்த புனிதவதி [கைம் பெண்] சுப்பிரமணியம் என்ற பெண்மணியை கடந்த வருடம் அக்டோபர் மாதம் 4-ந் திகதி கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த ஏ. கிருஷ்ணபிள்ளை அல்லது மாயவன், பி. சுவாமிநாதன், ரி. திருநாவுக்கரசு, என். நவராசா, ரி. ஜெயச்சந்திரன், டி. விநாயகம் ஆகிய ஆறு பேர்மீது குற்றஞ்சாட்டி சுன்னாகப் பொலிசார் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளனர்.

நீதிபதி முதல் எதிரியைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டு மேல்விசாரணையை இம்மாதம் 21-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் எதிரிகள் சார்பில் ஆஜரானர்.

## சுகாதாரப்பகுதி..

[1ம்பக்கத் தொடர்ச்சி]

நேரில்சென்று நிலைமையைப் பார்வையிட்டுவிட்டு இன்று கொழும்பு திரும்பினர்.

மலேரியாவை தடைசெய்வதற்கான புதிய திட்டமொன்றை விரைவில் மந்திரி செயல்படுத்துவாரென தெரிகிறது.

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவில் தற்போது நிலவும் கடும் வரட்சி காரணமாக தொற்று நோய்கள் காச்சல், வயிற்றோட்டம் ஆகியவற்றால் பெரும்பாலான குழந்தைகள் பிடிக்கப்பட்டுள்ளனர்.

## கும்பாபிஷேகம்

உரும்பராய், வெள்ளி

உரும்பராய் ஞானவைரவர் ஆலய விநாயகப்பெருமானுக்குப் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தில் இம்மாதம் 12ந்தேதி பகல் 12 மணி தொடக்கம் 1-34 மணிக்கிடையில்வரும் இடபலக்கின சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடைபெறும்.

**கல்வி**

புத்தகம்

6-ம் வகுப்புக்கணிதம்Iக்கு துணைநூலாக புதிய படிமுறைக் கணிதம், 6-ம் வகுப்பு I வெளிவந்துவிட்டது. நூறு நாள்களுக்கு பயிற்சியும் விளக்கமும். விலை 1.90. ஆசீர்வாதம் அச்சகம், புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

1897

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில்4காட்சி
7வது வாரம்!
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
**காவல்காரன்**


**REGAL** JAFFNA
Daily at
4-40. 7-00, & 9-45 p.m.
Jack Lemmon & Virnalsi
in
**How to Murder Your Wife**
[Technicolor]

**MANOHARA**
JAFFNA
Daily at 4-45, 7-00, 9-45 P.M
Nicola Parenti & Lucretia Love
in
**K. O.. Four to Go**
(Color Scope)
[Adults only]

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
மனேஜர் — பிரோஜா
நடித்த
[illegible]

**கெப்பிட்டல்** [கொழும்பு]
**பிளாஸா** [வெள்ளவத்தை]
**மைலன்** [ஜிந்துப்பிட்டி]
**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
**விஜயா** [மட்டக்களப்பு]
**ஸ்ரீகிருஷ்ணு** [திருமலை]
**மொடர்ன்** [பதுளை]
**ராஜ்** [நீர்கொழும்பு]

ரவிச்சந்திரன், கல்பனா, நாகேஷ்
நடித்த



**மதராஸ் To பாண்டிச்சேரி**

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேல் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10-ம்திகதி அச்சிட்டுவெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org